FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8074768

C

1. District மாவட்டம் : திருச்சி    PS காவல்நிலையம் : ஊழல் தடுப்பு & கண்காணிப்பு மாநில    Year ஆண்டு : 2022    FIR No மு.த.அ. எண் : 01    Date நாள் : 17.03.2022

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம்    Sections பிரிவுகள் : 7(a) of Prevention of Corruption Act (as ammended in 2018)
(ii) Act சட்டம்:    Sections பிரிவுகள் :
(iii) Act சட்டம்:    Sections பிரிவுகள் :
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from நாள் முதல் : 15.03.22    Date to நாள் வரை :
Time Period நேர அளவு :    Time from நேரம் முதல் : 11.00 hrs    Time to நேரம் வரை :
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 17.03.22    Time நேரம் : 0700 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : 17.03.22    Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : Computer typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் : O/o AE TANGEDCO, Navalpattu. Trichy. 16KM East.
Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலை எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : S. [illegible]    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : செல்வராசு
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு : 27.4.64    (d) Nationality : நாட்டினம் : இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் : [illegible] ஆப்பரேட்டர், BHEL    (g) Address முகவரி : A-2/361-F, BHEL டவுன்சிப், கைலாசபுரம், திருச்சி-14.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. [illegible], வணிக ஆய்வாளர், TANGEDCO AE Office, நவல்பட்டு
2) திரு. [illegible], உதவி பொறியாளர், TANGEDCO AE Office, நவல்பட்டு

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவு போனது / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவு போனது / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any :
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ______________ Rank ______________ to take up the investigation / Refused investigation / transferred to PS ______________ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் குறிப்பிட்ட சட்ட பிரிவுகளின்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுத்த ______________ பதவி ______________ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ______________ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஒப்புக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது

[signature] 17/03/2022

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 17/3/22

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 17.03.22

Name பெயர் K. BALAMURUGAN
Rank நிலை ______________ No. எண் ______________
Inspector of Police,
VAC, Trichy.

* GCP-240-34(Type-2) 50,000 Cps.-21.3.16(HCL-12)c.2

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று (17.03.2022) காலை 07.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திருச்சி, கைலாசபுரம், எண்.A-2/361-F BHEL டவுன்சிப்பை சேர்ந்த செல்வராசு மகன் S.நியாட்சாக்யா என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், நவல்பட்டு டி.என்.இ.பி. அலுவலகத்தில் பணிபுரியும் CI திரு.விக்டர், AE திரு.கமருதீன் மற்றும் புகார்தாரர் திரு.நியாட்சாக்யா ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 17.03.2022 காலை 09.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.01/2022 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புனர் S.நியாட்சாக்யா, த/பெ செல்வராசு, எண்.A-2/361-F BHEL டவுன்சிப், கைலாசபுரம், திருச்சி–14. (செல்–9940405790) பெறுநர் உயர்திரு.லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரி அவர்கள், காஜாமலை, திருச்சி. அய்யா, நான் திருச்சி, கைலாசபுரம், BHEL டவுன்சிப்பில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் திருச்சி BHEL–ல் கிரேன் ஆப்பரேட்டராக வேலை பார்த்து வருகிறேன். எனது மனைவி உஷாவின் பெயரில் கடந்த ஜனவரி மாதத்தில் திருச்சி திருவெறும்பூர், நவல்பட்டு பஞ்சாயத்திற்கு உட்பட்ட RSK நகரில் 2400 சதுர அடி அளவுள்ள மனை எண்.11–ஐ விலைக்கு வாங்கியிருந்தேன். அந்த இடத்தில் பேங்க் லோன் மூலமாக வீடுகட்ட நானும் எனது மனைவியும் முடிவு செய்து அதற்கான முதற்கட்ட வேலையாக தற்காலிக மின் இணைப்பு வேண்டி கடந்த 20–2–2022 அன்று நவல்பட்டு உதவி மின்பொறியாளர் அவர்களுக்கு எனது மனைவி பெயரில் ஆன்லைன் மூலமாக விண்ணப்பித்திருந்தேன். அதற்குபிறகு சில காரணங்களால் நான் நவல்பட்டு EB அலுவலகத்திற்கு செல்ல இயலவில்லை. எனக்கு EB கனெக்சனும் வராமல் இருந்ததால் பின் சுமார் 15 நாட்கள் கழித்து போனவாரத்தில் ஒருநாள், நான் பணிபுரியும் BHEL நிறுவன யூனிபார்ஃம்மிலேயே நவல்பட்டு உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று AE. திரு.கமருதீன் அவர்களை அவர் ரூமில் சந்தித்து எனது மனைவி உஷாவின் பெயரில் அளித்திருந்த விண்ணப்பத்திற்கு தற்காலிக மின்இணைப்பு வழங்குமாறு கேட்டேன். அதற்கு AE திரு.கமருதீன் அவர்கள், ஆமாம் உங்க மனு, வந்துள்ளது பார்த்தேன் என்று

சொல்லிவிட்டு CI விக்டர் என்பவரை அழைத்துவிட்டு, என்னிடம், உங்க மனு சம்மந்தமா இனிமே நீங்க இவரதான் பாக்கணும், எங்களுக்கு என்ன பார்மாலிட்டின்னு இவர் உங்களிடம் சொல்வார் என்று சொன்னார். அப்போது அங்கிருந்த CI விக்டர் என்னிடம், உங்க டெம்ப்ரவரி' கனெக்ஷனுக்கு இருபதாயிரம் ரூவா எங்களுக்கு கொடுத்திடுங்க என்று சொன்னார். அதற்கு நான், சார் ஏற்கனவே ஆன்லைன்ல பீஸ் கட்டிட்டேனே, இது என்ன சார் இதுவும் கவர்மெண்ட் பீசா என்று கேட்டேன். அதற்கு விக்டர் என்னிடம் நீங்க ஒரு BHEL staff-ஆக இருக்குறீங்க, இந்த மாதிரியெல்லாம் கேக்காதீங்க, வழக்கமா எல்லாரும் கொடுக்குறதுதான், நீங்க போயிட்டு பணத்தோட வாங்க உங்க வேலைய முடிச்சுக்கலாம் என்று சொன்னார். அதற்கு பிறகு 15-3-2022-ந் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நவல்பட்டு உதவி மின்பொறியாளர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றபோது, எதிரே வந்த CI விக்டர் என்னை பார்த்தவுடன், என்னை அழைத்துக் கொண்டு அலுவலகத்தைவிட்டு வெளியே ரோட்டுக்கு வந்து பணம் கொண்டு வந்துட்டிங்களா என்றார். அதற்கு நான் அவரிடம், சார் நீங்க கேட்ட பணம் அதிகமா இருக்கு, பாத்து கொறச்சி சொல்லுங்க சார் என்று கேட்டேன். அதற்கு CI விக்டர் இதுவே உங்களுக்கு கம்மியாதான் சொல்லியிருக்கோம் என்று சொல்லிவிட்டு, நீங்க வேணும்னா ரெண்டாயிரம் கொறச்சிகிட்டு பதினெட்டாயிரம் கொடுத்திடுங்க, உங்களுக்கு உடனே கனெக்சன் கொடுத்திடலாம் என்று சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. வேறு வழியில்லாமல் சரிங்க சார், பணம் ரெடி பண்ணிகிட்டு நாளைக்கு, இல்ல நாளை மறுநாள் வந்திடுறேன் சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். என்னிடம் தற்காலிக மின் இணைப்பிற்கு லஞ்சம் கேட்ட நவல்பட்டு AE கமருதீன் மற்றும் CI விக்டர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். Sd.xxx (S.Niyatsakya) 17/03/2022. Sir, Submitted to the Court of the Hon'ble Special Judge, Special Court for Prevention of Corruption Act 1988, Tiruchirappalli. Received the report at 0700 hrs on 17.03.2022 and made preliminary enquiry and registered a case in Trichy V&AC Cr.No.01/2022 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 0900 hrs on 17.03.2022. Sd.xxx (K.BALAMURUGAN) 17/3/2022 Inspr of Police, Vigilance & Anti-Corruption, Trichy.

[signature] 17/3/22

[K.BALAMURUGAN]
Inspector of Police
Vigilance & Anti-Corruption,
Trichy.